நோயாளி தகவல் கையேடு

# சோடியம் பாலிஸ்டைரீன் சல்ஃபொனேட்

(SODIUM POLYSTYRENE SULFONATE)

MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group — Adding years of healthy life
NUH National University Hospital — A member of the NUHS
Alexandra Health
EASTERN HEALTH ALLIANCE
Jurong Health
SingHealth

SINGHEALTH / PIL / T127R0

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

# சோடியம் பாலிஸ்டைரீன் சல்∴பொனேட் (Sodium polystyrene sulfonate) உயர் இரத்த பொட்டேசியத்திற்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. எனினும், இம்மருந்து உயர் இரத்த பொட்டேசியத்தைக் கட்டுப்படுத்துமே தவிர, அதைக் குணப்படுத்தாது.

## மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

பிரச்சினையின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். இந்த மருந்தை மருத்துவர் கூறும் அளவில் பயன்படுத்துங்கள். மருந்தைச் சரியான முறையில் எடுக்கத் தெரியாவிட்டால், மருந்தாளரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

சோடியம் பாலிஸ்டைரீன் சல்∴பொனேட் குடிமருந்தாகவும் (oral suspension) , மலக்குடல் கழுவு திரவமாகவும் (rectal enema) கிடைக்கிறது. இந்த மருந்தை ஒரு நாளைக்கு 2 அல்லது 3 முறை, அல்லது மருத்துவர் கூறியபடி உட்கொள்ள வேண்டும். மருந்தைக் குடிப்பதற்கு முன்பாக போத்தலை நன்றாகக் குலுக்குங்கள். இந்த மருந்தை உங்களிடம் கூறப்பட்ட முறையில் எடுப்பது முக்கியம். மருத்துவர் கூறியதைவிடக் கூடுதலாகவோ, அல்லது குறைவாகவோ, அல்லது அடிக்கடியோ உட்கொள்ளாதீர்கள்.

நீங்கள் குணமடைய ஆரம்பித்தாலும், மருந்தைத் தொடர்ந்து எடுங்கள். மருத்துவரிடம் ஆலோசனை பெறாமல் இந்த மருந்தை நீங்களாகவே நிறுத்தாதீர்கள்.

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

பக்க-விளைவுகள் பொதுவாக இருக்காது என்றாலும், சில வேளைகளில் அவை ஏற்படலாம். பின்வரும் பாதிப்புகள் கடுமையாக இருந்தால், அல்லது தொடர்ந்து நீடித்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்:

- மலச்சிக்கல்
- வயிற்றுப்போக்கு
- இரைப்பை பாதிப்பு
- குமட்டல்
- வாந்தி

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

பின்வரும் பாதிப்புகள் இருந்தால், மருத்துவரை உடனே அழையுங்கள்:

- குழப்பம்
- தசைப் பலவீனம்
- வழக்கமில்லாத வீக்கம்
- ஒழுங்கற்ற இருதயத் துடிப்பு
- மலக்குடல் அல்லது கீழ் இரைப்பை வலி
- அதிக தாகம்

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

சோடியம் பாலிஸ்டைரீன் சல்∴பொனேட் எடுப்பதற்கு முன்னால் :

சோடியம் பாலிஸ்டைரீன் சல்∴பொனேட், அல்லது வேறு மருந்துகளுக்கு உங்களுக்கு ஒவ்வாமை இருந்தால் அதை மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால், அதைக் கண்டிப்பாக மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்: முகம்/கண்கள்/ உதடுகள் வீங்கும், மூச்சுவிட சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

மருத்துவர் எழுதிக் கொடுத்த, அல்லது எழுதிக் கொடுக்காத மருந்துகளை, குறிப்பாக அமில எதிர்ப்பிகள் (antacids), டிகோக்சின் (digoxin), சிறுநீர் இறக்கிகள் (diuretics), மலம் இளக்கிகள் (laxatives) மற்றும் வைட்டமின்கள் அல்லது மூலிகைகளை நீங்கள் உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

இருதய நோய் அல்லது சிறுநீரக நோய், இரத்தக்கொதிப்பு அல்லது மலச்சிக்கல் உங்களை எப்போதாவது பாதித்திருந்தால் அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

நீங்கள் கர்ப்பமாக இருந்தால், அல்லது கர்ப்பமடையத் திட்டமிட்டால், அல்லது தாய்ப்பால் கொடுத்து வந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள். சோடியம் பாலிஸ்டைரீன் சல்∴பொனேட் எடுக்கும் காலத்தில் நீங்கள் கர்ப்பமடைந்து விட்டால், மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

சோடியம்-கட்டுப்படுத்தப்பட்ட உணவுத் திட்டத்தில் நீங்கள் இருந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

### சிறப்பு உணவுக் குறிப்புகள்

பொட்டேசியம் மாற்று உப்புகளை உட்கொள்வதற்கு முன்பாக மருத்துவரிடம் பேசுங்கள். மருத்துவர் உப்பு-குறைந்த அல்லது சோடியம்-குறைந்த உணவுத் திட்டத்தை உங்களுக்குப் பரிந்துரைத்தால், அந்த உணவு முறைகளைக் கவனமாகப் பின்பற்றுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பம் மற்றும் நேரடி வெளிச்சம் படாதவாறு, அறை வெப்பநிலையில் ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.